பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

நிதித்துறையில்
உங்கள் நண்பன்
★ ஷப்றா ★
தற்காலிக முகவரி:
உதயன் பணிமனை
292/2, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோவிலடி)
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50

Your Friends
In Finance
★ SHABRA ★
Temporarily Shifted
To:
Uthayan Office
292/2, Navalar Road,
Jaffna.

சுடர் 5: பிரமோதூத ஆனி 31 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ்தா பிறை 21 (15-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 142

### நேற்று மாலை திடீர் திடீரென நடத்தப்பட்ட

# விமானக் குண்டுவீச்சில்

# யாழ் நகரில் 6 பேர் பலி!

## அறுவர் காயம்; பல வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

நேற்று மாலை யாழ். நகரின் மீது திடீர், திடீரென நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் ஐந்து பொதுமக்களும், ஒரு போராளியும் உயிரிழந்தனர். ஆறு பொதுமக்கள் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமுற்றன.

நேற்று மாலை 4-15 மணியிலிருந்து 6 மணி வரை இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

முதலில் நேற்று மாலை 4-15 மணிமுதல் ஐந்து மணி வரை யாழ். நகரை வட்டமிட்ட இரண்டு பொம்மர்களும், மூன்று ''அவ்ரோ'' விமானங்களும் நகரில் பல இடங்களில் மாறி மாறித் தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலில் ஆரியகுளம் சந்தியில் உள்ள சலூன் ஒன்றும் வேறு பல கடைகளும், வீடுகளும் சேதமடைந்தன.

யாழ். ஆஸ்பத்திரி வீதி — வேம்படிச் சந்திக்கு அருகில், மருத்துவ நிலையம் ஒன்று அமைந்திருந்த வீடு ஒன்றும் விமானக் குண்டு வீச்சினால் முற்றாகச் சேதமுற்றது.

யாழ். பழைய பூங்கா பகுதியில் முதலில் குண்டு ஒன்று வீசப்பட்டது. இந்தக் குண்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### கொக்காவில் முகாமில் இருந்து

## தப்பிய படையினரை புலிகள் தேடித் தாக்கி வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 15

கொக்காவில் முகாம் தாக்குதலில் தப்பி அயலில் உள்ள காட்டிற்குள் பதுங்கியிருந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் தேடித் தாக்கி வருவதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு பதுங்கியிருந்த படைச் சிப்பாய்கள் குழு ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் பல இராணுவத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### ஹெலி சூடு

யாழ்ப்பாணம், ஜூலை 15

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் கொடிகாமம்பகுதியில் ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுச் சென்றது. [ஒ]

### சீனியும் பால்மாவும் பங்கீட்டில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வெள்ளியன்று லொறிகள் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ள சீனியும், பால்மாவும் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும்.

லொறிகளில் வந்துசேர்ந்த உணவுப்பொருள்களில் 3 ஆயிரம் கிலோ சீனியும், ஒரு லொறி பால்மாவும் அடங்கி உள்ளன. (இ-3)

# பிரதமர் வி. பி. சிங் ராஜினாமா செய்யப் போவதாக அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 15

பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக திரு. வி. பி. சிங் நேற்று அறிவித்தார்.

ஜனதாதள் தலைவர் திரு. எஸ். ஆர். பொம்மைக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பிரதமர் சிங் இதனைத் தெரிவித்து விட்டார்.

ஜனதாதள் நாடாளுமன்றக் குழுவை உடனடியாகக் கூட்டி புதிய தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்யும்படி திரு. சிங் ஜனதாதள் தலைவரைக் கேட்டிருக்கிறார்.

''நான் நேரடியாக எனது ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருக்கலாம். ஆனால் நான் அப்படிச்செய்ய விரும்பவில்லை.

''ஜனதாதள் கட்சியின் நாடாளுமன்றக் குழு புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யாத நிலையில் ராஜி



னாமாக் கடிதத்தை நான் ஜனாதிபதிக்கு அனுப்புவது, இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வர வழி வகுப்பதில் முடிவடையும்.

''ஆகவே புதிய தலைவர் ஒருவரை ஜனதாதள் தெரிவு செய்யும் வரை நான் ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்ப விரும்பவில்லை.

''ஜனநாயக நெறி முறைகளுக்காக நான் பதவியைத் தியாகம் செய்கின்றேன்''

''ஓம்பிரகாஷ் சௌதாலா விவகாரத்தில் நாட்டு மக்களும் எனது கட்சி உறுப்பினர்களும் என்மீது நம்பிக்கை இழந்து விட்டனர். இனியும் நான் பிரதமர் பதவியில் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை''

— இப்படி திரு. சிங் தனது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

### தேவிலால் மகன் சௌதாலா விவகாரம் சூடுபிடிக்கிறது

# இந்தியாவில் அரசியல் நெருக்கடி மூன்று அமைச்சர்கள் ராஜினாமா!

புதுடில்லி, ஜூலை 15

இந்திய மத்திய அமைச்சரவையில் இருந்து கருத்து வேறுபாடு காரணமாக மூன்று அமைச்சர்கள் ராஜினாமாச் செய்து விட்டனர்.

வர்த்தக, சுற்றுலாத்துறை அமைச்சர் அருண்நேரு, எரிசக்தி, சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் முகமது ஆரிப்கான், நாடாளுமன்ற விவகார அமைச்சர் சத்தியபால் மாலிக் ஆகியோரே அந்த அமைச்சர்கள் ஆவர்.

ஹரியானா மாநில முதலமைச்சராக துணைப்பிரதமர் தேவிலாலின் மகன் ஓம்பிரகாஷ் சௌதாலா மீண்டும் தெரிவு செய்யப்பட்டது தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இவர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களை பிரதமர் சிங்கிடம் நேரில் கையளித்தனர்.

மேலும் சட்டசபைத் தொகுதி இடைத்தேர்தலின் போது ஏற்பட்ட வன்செயல்கள் தொடர்பாக நீதிவிசாரணை நடத்தி முடிவு எடுக்கப்படுவதற்கு முன்னர், அச்சம்பவங்கள் தொடர்பாக பதவி விலகிய ஓம்பிரகாஷ் சௌதாலாவை மீண்டும் முத

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலும் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 15

கிளிநொச்சிப் பகுதியிலும் நேற்றுக் காலை இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தின.

நகரை அண்டிய பகுதிகளை இலக்கு வைத்தே குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதலில் வீடுகள் சில சேதமடைந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் ஊர்ஜிதமான தகவல்கள் கிடைக்கவில்லை.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கிளிநொச்சி இராணுவ முகாமில் ஹெலி ஒன்று இறங்க முற்பட்டது. அதை எதிர்த்து புலிகள் தாக்குதல் நடத்தினர். ஹெலி தரையிறங்க முடியாமல் உயரப் பறந்து சென்று விட்டது.

அதைத் தொடர்ந்து காலை 7 மணிக்கே பொம்மர்கள் வந்து குண்டு வீச்சை ஆரம்பித்தன. (ஓ)

### 5வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

திருகோணமலை மாவட்டம் இறக்கக்கண்டிப் பகுதியிலும் நேற்றுமுன்தினம் விமானக்குண்டுவீச்சு இடம்பெற்றது.

குண்டுவீச்சினால் இறக்கக்கண்டி பாலத்திற்கு அண்மையில் இருந்த ஐந்து வீடுகள் சேதமுற்றன. [உ-9]

## ஒந்தாச்சிமடத்தில் 168 முஸ்லிம்கள் கொலை?

சென்னை, ஜூலை 15

கல்முனைக்கும் களுவாஞ்சிக்குடிக்கும் இடையே மூன்று வாகனங்களில் சென்றுகொண்டிருந்த 35 முஸ்லிம்கள் ஒந்தாச்சி மடத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று கொழும்பில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் 168 பேர் கொலையுண்டதாகமுஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகள் மீது அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. [உ-எ]

### படுகாயமுற்ற அறுவர்

நேற்று யாழ் நகரில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் படுகாயமுற்றோர்:-

செல்வராஜா (41 வயது) கட்டுடை, செல்வரத்தினம் (73 வயது) யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத்தெரு, காந்தமூர்த்தி (26 வயது) யாழ்ப்பாணம், ஜேம்ஸ் (38 வயது), இராசரத்தினம் (28 வயது), மோகன் (20 வயது) ஆகிய ஆறு பேருமே காயமுற்றவர்களாவர். (உ-9)

# போதுமான உணவுப் பொருள் இருப்பதாக கூறுவது தவறு

### யாழ். உதவி உணவு ஆணையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். மாவட்டத்தின் உணவுப் பொருள் கையிருப்பு, இரு மாதங்களுக்குப் போதுமானது என்ற உணவு ஆணையாளரின் தகவல் தவறானது. அரசியல் நோக்குடன் தெரிவிக்கப்பட்ட கூற்று அது.

இப்படி கூறினார் யாழ். உதவி உணவு ஆணையாளர்

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் உணவு கையிருப்பில் இல்லை என்று ஒரு மாதத்துக்கு முன்னரே திணைக்கள தலைமையகத்துக்கு அறிவித்திருந்தோம்.

உணவுப் பொருள் அனுப்பாமல் கையிருப்புஇங்கு இருக்கிறது என்று பொய்த்தகவல் தெரிவிக்கின்றன. அரசியல் நோக்கில் கூறப்படும் கூற்று

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சி குழுவின் பயணம் ரத்தாகும்?

### ஐ. சோ. மு வும் விலகிக்கொண்டது

வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி சார்க்நாடுகளுக்கு எடுத்துக் கூற அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு ஒன்றை அனுப்புவது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதல்லவா?

இந்தக் குழுவில் இடம்பெற சகல தமிழ்க் கட்சிகளும் மறுத்துவிட்டதால் இந்தக் குழு சார்க் நாடுகளுக்கு செல்வது சந்தேகத்துக்கு இடமானதாகி விட்டது என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

தமிழ்க் கட்சிகள் இந்தக் குழுவில் இடம்பெறாததைக் காரணம் காட்டி, ஐக்கிய சோஷலிச அணியும் இக் குழுவில் இடம்பெறப் போவதில்லை என்று அறிவித்துவிட்டது.

அணியின் சார்பில் அத்தாவுட செனிவிரத்ன எம். பி. நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார். (உ-எ)

### சுபநேரம்

15-7-90

ஞாயிற்றுக்கிழமை ஆனி 31

சுபநேரம்!
09-00— 10-30

இராகுகாலம்
04-30—06-00

### முச்சந்தி முரளி



பானையும் பங்கீட்டிலை தான் குடுக்கவேணும் போலை......!

### நிதர்சனம் இருநாள் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 15

நிதர்சனம் ஒளிபரப்பு சேவை அடுத்த வாரம் முதல் இரண்டு நாட்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய், சனி ஆகிய நாட்களில் பிரஸ்தாப ஒளிபரப்பு இரவு 7 மணி முதல் 9 மணி வரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

### ஜீ.சி.ஈ உயர்தர பரீட்சை

## ஒத்திவைக்கக் கோருகிறது மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்து, ஸ்ரீ லங்கா அரசு பெரும் இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ் மாணவர்களின் நலன் கருதி அடுத்த ஆகஸ்ட் 10 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு அரசைக் கேட்கிறோம்.

அரசு பரீட்சையை ஒத்திவைக்காது விட்டால், அதனைப் பகிஷ்கரிப்பதைத் தவிர எமக்கு வேறு வழி ஏதுமில்லை.

—இவ்வாறு தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த நீண்ட அறிக்கை ஒன்றில் கோரியிருக்கிறது.

பரீட்சையை ஒத்திவைக்கக் கோருவதற்கான எட்டுக்கார

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

யாழ்நகரில் நேற்று மாலை இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் உயிரிழந்த ஐந்து பொதுமக்களில் மூவர் அடையாளம் காணப் பட்டனர். அவர்களின் விவரம்வருமாறு:

★ வேலுப்பிள்ளை சந்திரபாலன் (வயது21)-பூம்புகார், அரியாலை.

★ மோகன் (வயது 19)- கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.

★ இராசலிங்கம் - அரியாலை. (உ 9)

# வெள்ளியன்று வந்து சேர்ந்த மா பேக்கரிகளுக்கே விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். மாவட்டத்துக்கு வெள்ளியன்று லொறிகள் மூலம் வந்து சேர்ந்த 50 தொன் மா பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படமாட்டாது. பாண் தயாரிப்பதற்காக பேக்கரிகளுக்கே அந்த மா விநியோகிக்கப்படும்.

நேற்று செயலகத்தில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்ளின் வாராந்தக் கூட்டத்தில் இப்படி தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இரண்டு பேக்கரிகளைத் தெரிவு செய்து அவற்றுக்கு மாவை வழங்கி அவற்றின் மூலம் பாண் உற்பத்தி செய்யப்படும்.

பேக்கரிகள் வைத்தியசாலைகளுக்கும் பொதுமக்களுக்கும் விற்பனை செய்யும்.

மா விநியோகம், பாண் விநியோகம், மா கையிருப்பு ஆகியன சம்பந்தப்பட்ட விடயங்களை உதவி அரசாங்க அதிபர்கள் கண்காணிப்பர். (இ-3)

## இரு இலங்கைப் படகுகளை இந்தியக் கடற்படை பிடித்தது

வானொலித் தொடர்பு சாதனக் கருவிகள், ராடர் சாதனங்கள் பொருத்தப்பட்ட இரண்டு இலங்கைப் படகுகள் இந்தியக் கடல் எல்லைப்பகு

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி விற்பனை

எல்லா வகையான இறைச்சிக் கோழிகள் உடன் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (13730)

இறைச்சிக்கு உகந்த சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு விலை குறைக்கப்பட்டுள்ளது. சற்குணராஜா & 'பிரதர்ஸ்' பிரம்படி லேன், கொக்குவில். (13596)

### தேவை

பனம்பாணி தேவை கையிருப்பில் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்: அண்ணா தொழிலகம், இணுவில். (சி-5261)

### வீடு வாடகைக்கு

தனியார் பாடசாலைகள் கச்சேரி ஆகியவற்றிற்கு மிக அண்மையில் சமையல் வசதியுடன் கூடிய பகுதி வீடு வாடகைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும். இல. 143, C/o உதயன், யாழ்ப்பாணம் (13738)

### தவறிவிட்டது

241270270 V இலக்கம் கொண்ட எனது அடையாள அட்டை கொக்குவில் சந்தியில் 13-07-90 அன்று காணாமல் போய்விட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். வே. குணநாயகம் புகையிரத நிலைய வீதி, கொக்குவில். (13740)

### V.K.M. FARM CENTRE

இறைச்சிக்கோழி புறொயிலர் சில்லறைவிலை ருபா 50/- சுத்தமாக தயார்செய்யப்பட்ட முட்டையிடும் கோழிகளுக்கான தீனி (Layer mash) விற்பனைக்குண்டு தொடர்பு:- 12, கனகசபை லேன், (யாழ். இந்துக்கல்லூரி பின்பக்கம்) K. K. S. Road, யாழ்ப்பாணம். (13734)

## நெடுந்தீவில் ஹெலி சுட்டது

நெடுந்தீவு, ஜூலை 15

நெடுந்தீவுக்கு மேலாகப் பறந்த ஹெலிக் கொப்டர் ஒன்று மக்கள் வாழும் பகுதிகளில் சுட்டது. சேதம் ஏற்படவில்லை.

## முக்கிய அறிவித்தல்

வெளி மாவட்டத்தில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு உதவும் முகமாகவும், கல்வி சம்பந்தமாகவும் கலந்துரையாடல் ஒன்று 16-07-90 காலை 9 மணிக்கு விக்னா கல்வி நிறுவன மண்டபத்தில் நடைபெற உள்ளது. எனவே எமது நிறுவன மாணவர்களும் ஆசிரியர்களும் தவறாது சமுகம் அளிக்குமாறு கோரப்படுகின்றனர்.

அதிபர்
விக்னா கல்வி நிறுவனம்

[சி-5266]

## இடம் மாற்றம்

புஸ்பா ரேட்ஸ்
(எசன்ஸ் ஹவுஸ்)
11/4 A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

என்னும் முகவரியில் இயங்கிய எமது ஸ்தாபனம் பாதுகாப்புக் கருதி கீழ்வரும் முகவரியில் இயங்குகிறது

★ புஸ்பா ரேட்ஸ் ★
(எசன்ஸ் ஹவுஸ்)
66/6, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(முடமாவடி) [13743]

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



### சிற்றம்பலம் தயானந்தராசா

மேஜர் ஞானவேல்

மண்ணில்: 11 - 03 - 1966
தியாகத் தீயில்: 15 - 07 - 1989

மண்ணினை மக்கள் தம்மை
மறந்திடா மான வீரன்
தன்னையும் நாட்டுக் கீந்து
தளர்விலா களமும் கண்டான்
விண்ணிலும் எமக்காம் வீர
விடுதலை பொறிக்க என்று
எண்ணியோ எம்மை விட்டு
எழில் சேர் வீரனானாய்

● ● ● ●

ஆண்டுகள் நூறானாலும் அழியாது உந்தன் வீரம்

உற்றார், உறவினர், நண்பர்கள்.

இடைக் குறிச்சி,
ரெணி. [13702]

## உ
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### தி. ச. தியாகராஜ ஐயர்

(யாழ்நகர் - கொழும்புத்துறை வாசரும், ஸ்ரீ பழனியாண்டவர் கோயில் ஆதீன அர்ச்சகரும் இளைப்பாறிய இந்துமகாவித்தியாலய ஆசிரியரும்)

தோற்றம்: 4 — 8 — 1909
மறைவு: 25 — 6 — 1989

திதி: ஆனி மாத அபரபக்க அட்டமி
(15 — 7 — 1990)

எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழ வைத்த கண் கண்ட தெய்வத்தின் திருவடிகளுக்கு எமது பணிவன்பான வணக்கம்.

இன்னும் உங்கள் ஆசியையே கோரி
தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


23, விதானையார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். [13727]

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

(15-07-90)

தோற்றம்:- 1920-09-30

மறைவு:- 1990-06 15



### இறப்பியல் யோசவ் பொன்னுத்துரை

(மூப்பர்)

போரினால் அழியவில்லை; நீ வாழ்ந்தது
போதுமென்று நாம் நினைக்கவில்லை
பேரோடு புகழ் சேர்த்து வைத்து விட்டு
பேசாமல் நீ போனதேனோ!
பார் படைத்த பரமனின் தாழ் சேர்ந்து
சீர்பெற்று ஆன்மா சாந்தியுற
கரம் கூப்பி தொழுகின்றோம்; தினமும்
கண்ணீரால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

-இவர் பிரிவால் ஆழ்ந்த கவலையில் தோய்ந்து வாடும்-

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரன், பேத்தி

19/8, கொன்வென்ற் றோட்,
யாழ்ப்பாணம். (13744)

## அறிவித்தல்

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டு வந்த திரு. நவரட்ணசிங்கம் இரவீந்திரகுமார் அவர்கள் கீழ்க்காணும்விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வி. நடராசா
செல்வி. விமலாவதி நடராசா'
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
[சி/ 5270]

## முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனம் நேற்று [14-07-90] தொடக்கம் தினசரி காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை திறந்திருக்கும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

KVB
வீடியோ சென்ரர்.
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

[சி-5268]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

### செல்லப்பா கந்தசாமி

தோற்றம்: 02 - 10 - 1932
மறைவு: 15 - 06 - 1990

எம்மில் அணையாத ஒளியாக மிளிர்ந்து நிறைந்த
எம் இனிய தந்தையே!
நாட்கள் மாதங்களாகி,
மாதங்கள் ஆண்டுகளாகி,
ஆண்டுகள் யுகங்களானாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு
என்றும் நீங்காது.

அன்னாரின் மரணச் சடங்குகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 15-07-90 நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்.

உங்கள் பிரிவை தாங்க முடியாத
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள்,
அன்புச் சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்.

ஆண்டார் செட்டி வெளி,
நானாட்டான். [13742]

## 7 ஆம் ஆண்டு நினைவு நாள்



★

★



வீரமரணம் 15 - 07 - 1983


லெப்டினன்ட்
ஆசீர் சீலன்
(சார்ள்ஸ் அன்ரனி)
திருமலை

ஆனந்த்
(அருள்நாதன்)
மயிலிட்டி

உங்கள் மரணத்தின் மூலம் விடுதலைப் போராட்டத்தை
வீறு கொள்ளவைத்த வீரர்களே உங்களுக்கு
எங்கள் வீர வணக்கங்கள்.

- விடுதலைப் புலிகள் -

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருவாளர் க. ஜெயராமச்சந்திரன்

சாவகச்சேரி
(கொழும்பு துறைமுக அதிகாரசபை மொழிபெயர்ப்பாளர்)

மலர்வு: 15-12-1946 உதிர்வு: 15-06-1990

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சகுந்தலாதேவி ஜெயராமச்சந்திரன்

சரவணை

மலர்வு: 04-09-1949 உதிர்வு: 14-07-1988

அன்புடனும் பாசத்துடனும் எம்முடன் வாழ்ந்து எம்மை பக்குவமாக வளர்த்தெடுத்த எமது அன்புச் செல்வங்களே! உங்கள் பிரிவால் வாடுகின்றோம், துயருறுகின்றோம். உங்கள் இனிய நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்:

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்:

பிள்ளைகள்: துஷாந்தி, ஜெயமோகன், மற்றும் உறவினர்கள்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சிறிமாவோவின் "நியாயம்"

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இப்போது இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவி. தென்னிலங்கையில் உள்ள இரண்டு பிரதான கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் அவரே.

வடக்கு - கிழக்கு மாகாணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இராணுவ நடவடிக்கை தான் ஒரே வழி என்று அவர் கருத்து உதிர்த்திருக்கிறார்.

எதிர்க்கட்சி என்றால், எந்த விடயத்திலும், அரசாங்கம் செய்வதற்கு எதிராக நின்றால் தான் வாக்கு வேட்டையில் வெற்றி காணலாம் என்பது இலங்கை அரசியலில் ஓர் இயல்பாக - நடைமுறையாக - இருக்கிறது.

ஆனால் இம்முறை மிகப் புதிதாக, அரசாங்கத்தின் பக்கத்தில் நின்று பேசுகிறார் எதிர்க்கட்சித் தலைவி...! சிங்களப் பேரினவாதம் என்ற ஒரு விருட்சத்தின் பல கிளைகள்தான் தென்னிலங்கை அரசியல் கட்சிகள். அதனை மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தி இருக்கிறார் அம்மையார். அவ்வளவுதான்.

சிங்களப் பேரினவாதத்தின் நிலைத்தூணாக நின்று, சிங்களம் மட்டும் உத்தியோக மொழிச் சட்டத்தைக் கொண்டு வந்து இனத்துவேசத்தை வேரூன்றச் செய்த பண்டாரநாயக்காவின் மனைவி அல்லவா அவர். தமிழர்களுக்கிருந்த அற்பசொற்ப சலுகைகளையும் அழித்து, 1972 இல் புதிய பேரினவாத அரசியலமைப்பைத் தானே கொண்டு வந்தவர் அல்லவா இந்தச் சிறிமா. 1974 இல் தமிழாராய்ச்சி மாநாட்டில் தொடங்கி இராணுவத் தர்பாரும், தமிழர் மீது இராணுவ ஆட்சியும் நடத்தி ருசி கண்டவரல்லவா இவர்.

தமிழ் மக்களின் வாக்குகளுக்குக் கையேந்தும் காலம் போய்விட்டது. அப்படி ஒரு சந்தர்ப்பம் இனி வராது. தமிழர்களின் நண்பர் என்று காட்டுவதற்காக அவ்வப்போது போலிவேடம் போட்டது போல, இனி அப்படிச் செய்யத் தேவை இருக்காது. ஆகையால் உண்மையான தோற்றத்தை - நிரந்தரமான தோற்றத்தைக் காட்டிவிடத் துணிந்து விட்டார் அவர்! அதன் விளைவு தான் அவரது இராணுவத் தீர்வு மோகம்.

அடுத்த தேர்தலை நினைக்கும் அரசியல்வாதிகளில பாவம், சிறிமாவும் ஒருவர் தானே இப்போது தனது கோரரூபத்தைக் காட்டிக் கொண்டிருக்கும் சிங்களப் பேரினவாதத்தின் பக்கம் சாயாமல் இருக்க முடியுமா அவரால்? மறுகருத்துத் தெரிவித்தால், தேர்தலில மட்டும் அல்ல அரசியலில் இருந்தும் தூக்கி வீசப்படலாம் என்ற அச்சம் அவருக்கு இல்லாமலா போகும்? ஜே. வி. பியின் தீவிரவாதத்தை அடக்க அரசியல் தீர்வு வேண்டும் என்று வாதாடியவர் இப்போது இராணுவத் தீர்வு பற்றிப் பேசுவதன் அர்த்தமே அது தான்.

எது எப்படியோ இனம் இனத்தையே சாரும். அதை யாரும மறைக்க முடியாது; தடுக்கவும் முடியாது. சிறிமாவோ அதனை நிரூபித்து விட்டார். அது மட்டுமல்ல இப்போது நடப்பது விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான போராட்டம் அல்ல. தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான போராட்டமே. தமிழர் தேசமும் தமிழரும் ஒரு புறம்; சிங்களத் தேசமும் சிங்களவரும் ஒரு புறம். இதனையும் அவர் மறைமுகமாகச் சொல்லிக் காட்டியிருக்கிறார்.

அடுத்த தேசத்து மக்களைப் பற்றி ஸ்ரீலங்கா அரசியல்வாதியான சிறிமாவோ ஏன் கவலைப்பட வேண்டும்? அந்த வகையில், அவர் சார்ந்திருக்கும் சிங்களப் பேரினவாதத்தின் பக்கத்தில், சிறிமாவோ "நியாயமாக"த் தான் கூறியிருக்கிறார்! விட்டுவிடுங்கள்

# மட்டக்களப்பில் விவசாய நிலங்கள் பெருமளவு பாதிப்பு

### விவசாயிகள் இடம் பெயர்வு

மட்டக்களப்பு, ஜூலை 15

மட்டக்களப்பில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக விவசாய நிலங்கள் பல கைவிடப்பட்டுள்ளன. விவசாயிகள் இடம் பெயர்ந்திருப்பதே இதற்குக் காரணம்.

களுதாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு, குருக்கள் மடம், செட்டிபாளையம் ஆகிய இடங்களே பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ள வெற்றிலை, கத்தரி, வெங்காயம் ஆகியவை போதிய நீர்வசதி இன்றி அழிந்துபோகின்றன. கணிசமான அளவு நெற்செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. (இ)

## தற்போது மூடப்பட்டுள்ள யாழ். பெரியாஸ்பத்திரியில் இரவு நேரங்களில் களவு

யாழ்ப்பாணம், ஜூலை 15

தற்பொழுது இயங்காத நிலையில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலையில் இரவு நேரங்களில் பொருள்கள் களவாடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரக்கடமைக்குகாவலாளிகள் அமர்த்தப்பட்டும் களவுகள் தொடருவதாக ஆஸ்பத்திரி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மூடப்பட்ட பல வார்ட்டுகளில் இருந்து தண்ணீர் பைப்புகள், ரியூப்லைட்டுகள் மின்விசிறிகள் களவாடப்பட்டுள்ளன.

வைத்தியர்கள் விடுதியில் இருந்தும் பல பொருள்கள் களவாடப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. (இ-10)

### இரவு நேர ஊரடங்கு

கொழும்பு, ஜூலை 15

காத்தான்குடி, ஆரையம்பதி ஆகிய கிராமங்களில் கடந்த சிலதினங்களாக ஆயுதப்படையினரால் இரவு நேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு வருகிறது. (இ-எ)

### அகதிகள் வருகை குறைகிறது

சென்னை, ஜூலை 15

இலங்கைக் கடற்படையினரின் கெடுபிடிகளாலும், டீசல் பற்றாக்குறையினாலும் இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்திற்கு வருவது கடந்த சில தினங்களாக குறைந்து உள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன்களைக் கவனிக்க தமிழ் நாடு அரசால் நியமிக்கப்பட்ட விசேட அதிகாரி திரு. சி. எம். இராம்தாஸ் இதனைத் தெரிவித்தார். (இ-எ)

### மூவர் மட்டும் வள்ளத்தில்

கொழும்பு, ஜூலை 15

மட்டக்களப்பு வாவி மற்றும் ஆறுகளில் மூவருக்கு மேல் வள்ளங்கள் மூலம் பயணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

வள்ளம் ஓட்டி உட்பட மூவருக்கு குறைவான எண்ணிக்கையினரே ஒரு வள்ளத்தில் பயணம் செய்ய முடியும் என்று விமானப் படையினர் பணித்துள்ளனர். (இ-எ)

### சிவில் நிர்வாக இணைப்பாளர்

கொழும்பு, ஜூலை 15

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் சிவில் நிர்வாக இணைப்பாளராகதுறைமுக, கப்பற்றுறை அமைச்சின் செயலாளர் திரு. டி.கே. திஸநாயக்காவை ஜனாதிபதி நியமித்திருக்கிறார். (இ-எ)

## ஈழத் தமிழர் 9,000 பேர் தமிழக பொலீஸில் பதிவு

### பதியாதோர் மீது கடும் நடவடிக்கை

சென்னை, ஜூலை 15

1983 இல் இருந்து உரிய ஆவணங்கள் இன்றி தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழர்களில் இதுவரை 9 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பொலீஸ் நிலையங்களில் தங்கள் விவரங்களை பதிவு செய்துள்ளனர்.

பதிவு செய்வதற்கான கால எல்லை இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைகின்றது.

இந்தக் கால எல்லைக்குள் பதிவு செய்யாத இலங்கைத் தமிழர் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ் நாடு பொலீஸ் டைரக்டர் ஜெனரல் பி. துரை கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளரிடம் தெரிவித்தார். [இ-எ]

### கரைஒதுங்கிய சடலங்கள்

குருநகர், ஜூலை 15

கடந்த வியாழக்கிழமை பெரியவேலிப் பகுதியில் ஒரு சடலமும், மண்ணித்தலைப் பகுதியில் மற்றொரு சடலமும் கரை ஒதுங்கின.

கடலில் மேலும் சில சடலங்கள் மிதந்து கொண்டிருப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

சில தினங்களுக்கு முன்பு இயந்திரப்ப கொன்று தனியாகக் கரை ஒதுங்கியதுகுறிப்பிடத்தக்கது. [இ-51]

## ரூ. 1,000 முற்பணம் பெறுவதில் அரசாங்க ஊழியர் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள அரசாங்க ஊழியர்கள் சம்பளமுற்பணம் பெறுவதில் சிரமம் ஏற்படுவதாகப் புகார் கூறப்படுகிறது.

இடம்பெயர்ந்த அரச ஊழியர்களுக்கு சம்பள முற்பணமாக ஆயிரம் ரூபா செயலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

சிரேஷ்ட அதிகாரிகள் சிபார்சு செய்தால்தான் இந்த முற்பணத்தை அவர்களால் பெறமுடியும்.

அந்த ஊழியர்களுக்கு தெரிந்த சிரேஷ்ட அதிகாரிகள் இல்லாத பட்சத்தில் சாதாரண ஊழியர்கள் சிபார்சு செய்ய முடியாது.

இந்த நிலையில் பல ஊழியர்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக வந்தும், பணம் பெற முடியாத நிலையில் உள்ளனர் என்று கவலை தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

### ஒத்திவைக்க----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணங்கள் இந்த அறிக்கையில் விவரமாக விளக்கப்பட்டிருந்தன.

மாணவர்களின் இக்கோரிக்கைக்கு சகல மாணவர்களும், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரும், கல்வித் திணைக்களம், பொது ஸ்தாபனங்கள் ஆகியவையும் ஆதரவு தர வேண்டும் என்றும் ஒன்றியம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

ஒன்றியம் இது தொடர்பாக விடுத்த அறிக்கையின் முழு விவரம் நாளைய உதயனில் பிரசுரமாகும். (உ)

### இந்தியாவில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லமைச்சராக அனுமதித்தது தவறானது என்று மூன்று அமைச்சர்களும் கூறியுள்ளனர்.

இத் தொகுதித் தேர்தல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

சௌதாலா இத்தொகுதியில் ஒரு வேட்பாளராகப் போட்டியிட்டார்.

சௌதாலா வேறு ஒரு தொகுதியின் இடைத் தேர்தலில் பின்னர் போட்டியிட்டு எம். எல். ஏ ஆகியிருக்கிறார்.

இதனிடையில் சௌதாலா தவிர்ந்த ஜனதா தள் முதலமைச்சர்கள் அனைவரையும் மாநாடு ஒன்றுக்கு வரும்படி ஜனதா தள் தலைவர் எஸ். ஆர். பொம்மை அழைத்திருக்கிறார்.

பெங்களூரில் இருந்துநேற்று அவசரமாக புதுடில்லி சென்ற திரு. பொம்மை, பின்னர் பிரதமர் சிங்கை சந்தித்து ஒரு மணி நேரம் வரையில் பேச்சுக்கள் நடத்தினார்.

திரு. சௌதாலா மீண்டும் முதலமைச்சராக்கப் படவிருக்கிறார் என்ற தகவல், அவர் முதலமைச்சராக தெரிவுசெய்யப்பட்டார் என்ற செய்தி கிடைக்கும் வரை தனக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று பிரதமர் வி. பி. சிங் கூறியிருக்கிறார். (இ-எ)

# பண்டங்களும், பணப்புழக்கமும் குறைந்து விட்டன; வறுமைக்கோலம் புதிதாக வளர்ந்து வருகிறது

கடந்த ஒரு மாத காலமாக வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமைகள் மீண்டும் இலங்கையில், சிறப்பாக வடகிழக்குப் பிரதேசத்தில் பாரதூரமான பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும். அவ்வாறான பாதிப்புக்கள் குறுங்கால வாழ்க்கைத் தரத்திலும் நீண்டகால இப்பிரதேசத்தின் அபிவிருத்தி நிலைமைகளிலும் குறிப்பிடத்தக்க பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியன. அத்தகைய பாதிப்பிலிருந்து மீள்வதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்துவதும் அவசியம்.

இலங்கையின் மொத்தச் சனத்தொகை தற்போது 1 கோடி 60 லட்சம் வரை காணப்படுகிறது. இவற்றில், வடபகுதியில் அடங்கும் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மாத்திரம் 12.7 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இது மொத்தக் குடித்தொகையில் 7.7 சதவீதமாகும். இதேபோல மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் 7 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். அம்பாறை நீங்கலாக வடகிழக்கில் 19.7 லட்சம் மக்கள் வாழ்கின்றனர் இலங்கையின் சனத்தொகையில் இவர்கள் 11.8 சதவீதத்தினராவர். இலங்கையின்சராசரிக் குடும்ப அங்கத்தினர் 5.2 பேர் எனக் கொண்டால் இப்பிரதேசத்தில் 3,77000 குடும்பங்கள் உள்ளன.

### இன்றைய பொருளாதாரம்

### நெருக்கமாக வாழும் பகுதி

இலங்கையின் வரள் பகுதியில கூடுதலான மக்கள் வசிக்கும் மாவட்டம் யாழ்ப்பாண மாவட்டமே இங்கு 8,46000 பேர் உள்ளனர். இலங்கையின் குடித்தொகையில் 5.0 சதவீதமானோர் இங்கு வாழ்கின்றனர். ஒரு சதுர கிலோ மீற்றருக்கான இலங்கையின் சராசரி மக்கள் அடர்த்தி 257 பேராக காணப்பட, யாழ்ப்பாண மாவட்டத்தில் இது 361 பேராகவுள்ளனர். இங்கு 67.4 சதவீதமானோர் கிராமங்களிலேயே வாழ்கின்றனர்.

வடகிழக்கில் நிகழும் யுத்தம் இந்தளவு பெருந்தொகையான மக்கள் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கக்கூடியன என்பதை மனங்கொண்டால் பாதிப்பின் தன்மையை விளங்கிக் கொள்ளலாம். தற்போதைய யுத்த நிலைமைகள் இருவழிகளிலான பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தக் கூடியன அவை:

1. குறுங்கால பாதிப்புக்கள்.
2. நீண்டகாலப் பாதிப்புக்கள்.

### குறுங்காலப் பாதிப்புக்கள்

தற்போதைய யுத்த நிலைமைகள் போக்குவரத்து, மின்சார விநியோகம், வங்கித் தொழில், குடிதண்ணீர் விநியோகம் போன்ற சேவைகளை முதலில் பாதித்துள்ளது. இவற்றை பொருளாதாரத்தின் உள்ளமைப்பு வசதிகள் என்போம்.

இவற்றைப் பின்னணியாகக் கொண்டுதான், தானிய உற்பத்தி, உப உணவுற்பத்தி, பண்ணைத் தொழில், கைத்தொழில்கள், வியாபாரம் பொது நிர்வாகம், ஏனைய அலுவலகப் பணிகள் என்பன செயற்படுகின்றன.

இதனால் வடகிழக்கின் யுத்த நிலைமைகளினால் பல்வேறு உற்பத்திகளும் பாதிக்கப்பட்டுள்ளன. தொழில் வாய்ப்புக்கள், மக்களின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளன விலை மட்டங்கள் மிக வேகயாக உயர்ந்துள்ளன. பண்டங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது நீண்ட வரிசையில் உணவுக்காக காத்து நிற்றல அதிகரித்துள்ளது பணப்புழக்கம் பாதிக்கப்பட்டுள்ளது. கடன் பெறுதல் கடினமாகி வருகிறது. கடன் விற்பனையை சில்லறை வியாபாரிகள் நிறுத்தி விட்டனர். காசோலை ஏற்கப்படாத நிலை வலுவடைந்து வருகின்றது. இத்தகைய தொடர் விளைவுகள் குறுங்காலத்தில் பல்வேறு வழிகளில் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன.

### நகர்சார்ந்த தொழில் பாதிப்பு

(i) தற்போதைய யுத்த நிலைமைகளினால் எரிபொருள் விநியோகம் தடைப்பட்டுள்ளது. சில பகுதிகளில் மின்வெட்டும் ஏற்பட்டுள்ளது. வியாபார நிலையங்கள் செயலிழந்துள்ளன. போக்குவரத்தும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் தொழிலாளர் தொழில் நாடி இடம்பெயர்வது முடியாதுள்ளது. இதனால் நகரங்களில் பாரம் சுமப்போர், வண்டில் இழுப்போர், வாகன ஓட்டிகள், விற்பனைப் பணியாளர், சுயவிற்பனையாளர் போன்றோரும் நாளாந்தம் வருமானம் தேடும் கட்டிடத் தொழிலாளர், தச்சுத் தொழிலாளர் போன்றோரும் தொழில் பெறும் இடங்களுக்குச் செல்ல முடியாதுள்ளனர். தொழிலின்றியுமுள்ளனர். இவர்கள் வருமானத்தையும் இழந்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 33 சதவீதமான மக்கள் நகர்சார்ந்த தொழில் வாய்ப்பில் தங்கியுள்ளமையால் பாதிப்பு அதிகமாகவுள்ளது.

கிராமப் பகுதிகளில் பயம் காரணமாகவும், எரிபொருள்கள், உள்ளீடுகள் பெறுவதிலான சிரமங்கள காரணமாக, உற்பத்தி பரவலாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்கள் சமயா சமய தொழில்களை இழந்துள்ளனர். சுயமுயற்சியாளரும் பயிர்ச்செய்கையைக் கைவிட்டுள்ளனர்.

கடற்கரைக் கிராமங்களான மயிலிட்டி, மாதகல் போன்றனவும், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு கடற்கரைப் பகுதிகளும் பயம் நிறைந்த பிராந்தியங்களாக மாறியுள்ளன ஆழ்கடல் மீன்பிடி முற்றாகவே கைவிடப்பட்டுள்ளது. கரையோர மீன்பிடியிலும் பெருந்தொகையானோர் ஈடுபடமுடியாத நிலை காணப்படுகிறது. அவ்வப்போது மிகச் சில பகுதிகளில் மாத்திரம் மிகச் சிறிய அளவில் பிடிக்கப்படுகிறது. இறால், நண்டு போன்றவற்றை ஏற்றுமதிக்காக அனுப்பும் வசதிகளும் தடைப்பட்டுள்ளன.

மா. சின்னத்தம்பி
B. A B. Phil Hons
துணை ஆசிரியர்:-
பொருளியலாளன்

### உற்பத்தி சந்தைப்படுத்தல் பாதிப்பு

இவ்வாறு உற்பத்தி சந்தைப்படுத்தல் என்ற இருமுனைகளும் பாதிக்கப்பட்டிருப்பதால இங்கு தொழில் வாய்ப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. வள்ளங்கள், வலைகள், மிதவைகள் போன்றவற்றைப் பாதுகாப்பது கூட கடினமாகியுள்ளது.

நகர்ப்பகுதியிலும், அதனை [illegible] இயங்கி வரும் [illegible] முயற்சிகளில் முதலாளிகள் கூட பாதுகாப்புக் கருதி தொழிலை மூடியுள்ளனர். அல்லது இடம் மாறுவதில் ஈடுபட்டுள்ளனர். பீடி சுற்றுதல், அப்பளம் செய்தல், உடுபுடவை தயாரித்தல் போன்ற தொழில்களில் தொழில் வாய்ப்புப் பெற்ற நடுத்தர, குறைந்த மட்ட வருமான நிலை சார்ந்த பெண்களின் தொழில் வாய்ப்பும் மறுக்கப்பட்டுள்ளது. இதன் உரிமையாளர்களும் உற்பத்தியில்லை, விற்பனைக்யில்லை, வங்கிச் செயற்பாடில்லை என்ற நிலைகளைக் காட்டி, தம் நிலைய தொழிலாளருக்கு சம்பளமோ, சம்பள முற்பணமோ, கடனோ வழங்கமாட்டார்கள்.

### காசு விற்பனை

இவ்வாறு பல துறையிலும் தொழில் வாய்ப்பு வீழ்ச்சியுற்றுள்ளன. அவர்களுக்கு வருமானமில்லை. இவர்களிடம் சேமிப்புக்களும் பண வடிவில் இருப்பதில்லை இதனால் கடன் தேவையை நாடுவர். இதுவரை நுகர்வுக்கு பண்டங்களைக் கடனாக வழங்கியோர் தற்போது காசு விற்பனைக்கு மாறியுள்ளனர். இதனால் தொழிலாளர் கடன் கொள்வனவு செய்வதும் இயலாததாகி விட்டது.

### தாக்கங்களும் தடுப்பு வழிகளும்

இவ்வாறு வருமானம் குறைய கடன் வசதிகளும் தடைப்பட குடும்பத் தலைவர்கள் மன விரக்தியுடனும், பயத்துடனும், பட்டினிக் குடும்பங்களை பேணும் வழி தெரியாது விழிக்கின்றனர். இது புதிதாக வளர்ந்து வரும் வறுமைக் கோலமாகும். இதனால் குடும்ப சிதைவுகளும் அதிகரிக்கின்றன.

(ii) கிராமிய உற்பத்தித் துறைகள் பாதிக்கப்படுவதாலும் போக்குவரத்துத் தடைகளினாலும் உற்பத்தி பிரதேசங்களிலிருந்து ஏனைய பகுதிகளுக்கு தானியம், உப உணவுப் பொருள்கள், காய்கறிகள் என்பன கொண்டு செல்லப்படுவதில்லை. அல்லது தாமதமாகவே செல்கின்றன.

இதனால் பொருள்தட்டுப்பாடு அதிகரிக்கிறது. இதனால் விலையும் கூடிவிடுகிறது. பொருள் பதுக்கல், நியாயமற்ற விலையுயர்வு என்பவற்றுக்கெதிரான நடைமுறைகள் ஓரளவு இப்பிரதேசங்களில் காணப்படுவதால் விலையுயர்வினால் ஏற்படும் துயர் குறையவும் வாய்ப்புண்டு.

எனினும் எரிபொருட் தட்டுப்பாடு, போக்குவரத்து வசதிக் குறைவு, விற்பனை நிறுவனங்களின் குறைந்தளவான செயற்பாடு என்பவற்றால் பொருள் பற்றாக்குறையும், விலையுயர்வும் தொடர்கின்றன. இதனால் வாழ்க்கைச்செலவு கூடுகிறது வாங்கக் கூடிய பண்டங்களின் அளவு குறைந்துவிடுகிறது. மக்களிடம் பணப்புழக்கம் குறைவான நிலையில் விலையுயர்வு வறுமையையும் துன்பத்தையும் அதிகரிக்கச் செய்துள்ளது.

### காசோலைகள் கடதாசிகளாகி விட்டன.

(iii) அரச ஊழியர்களில் பெரும்பாலானோருக்கு முழு வேதனமும் கொடுபடவில்லை, ஒருபகுதி வேதனம் கொடுபட்டுள்ளது. பெருந்தொகையானோர் இடம் பெயர்ந்துள்ளனர். யுத்த நிலைமைகளுக்கேற்ப வருமானம் பெறக் கூடியதாக வேறு தொழில் செய்யக் கூடிய தொழிற் பயிற்சியோ, அதற்கான தொழில் சார் உளவியல் விருப்பு நிலையோ பெற்றவர்களாயில்லை. இதனால் இவர்கள் வருமானம் குறைவாகவே காணப்படுகிறது. விலைகளும் கூடிச் செல்லும்போது இவர்களின் வாழ்க்கைத் தரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வங்கிகளே காசோலைகளை மாற்றுதற்கு மறுக்கும் நிலையில், வியாபார நிறுவனங்கள் காசுக் கொள்வனவிலும், காசு விற்பனையிலும், தங்கியிருக்கும் நிலையில், காசோலை வடிவிலான அவசர முற்பணம் அவர்களுக்கு உதவவில்லை. பலருக்கு முற்பணமாக வழங்கப்பட்ட காசோலை "பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் கடதாசி"களாக தோன்றின. எரிச்சலூட்டும் நடவடிக்கையாக இதை உணர்ந்ததோடு, தமது வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க தமது கையிலுள்ள சிறு நகைகளையும், சைக்கிள் போன்றவற்றையும் அவற்றின் பெறுமதியிலும் மிகக் குறைந்த விலைக்கு விற்கும் படியும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஆசிரியர்களும், எழுதுவினைஞர்களும், சிற்றூழியர்களும் இத்தகைய நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

(வளரும்)

### தப்பிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினர் கொல்லப்பட்டதாகவும்-

15 ஏ. கே றைபிள்களும், மோட்டார்களும் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இவ்வாறு காட்டில் உயிரிழந்தபடையினருடன் சேர்த்து கொக்காவில் தாக்குதலில் இதுவரை 72 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன, [உ-9]

### விமானக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டில் சிக்கி விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி லெப்ரினன்ட் அம்பி (சித்தர் கனகரத்தினம் - அச்சுவேலி) வீரமரணமடைந்தார்.

முனியப்பர் வீதியிலும், வீரசிங்கம் மண்டபப் பகுதியிலும் சில குண்டுகள் விழுந்து வெடித்தன.

ஐந்து மணியளவில் போர் விமானங்கள் நகரப் பகுதியை விட்டுச் சென்றன.

#### திரும்பி வந்தன

பின்னர் மாலை 6 மணியளவில் மீண்டும் திடீரென இரண்டு விமானங்கள் நகருக்கு மேல் பறந்தன. அவற்றில் ஒன்று யாழ். செயலகப் பகுதிக்கு முன்பாக—தேர்தல் அலுவலகம் முன்பாக — திடீரென குண்டு ஒன்றைப் போட்டது.

அந்தக் குண்டில் சிக்கி வீதியில் போய்க்கொண்டிருந்த ஐந்து பொதுமக்கள் உயிரிழந்தனர். ஆறு பேர் காயமுற்றனர்.

அப்பகுதியில் வந்து கொண்டிருந்த பொதுமக்களுள் ஒருவரின் கால் விமானக் குண்டு வீச்சினால் துண்டிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(உ-9-10[

### போதுமான- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது.

மக்கள் உள்ளூர் பொருள்களை பாவிப்பதால்தான் ஓரளவு உணவுப் பிரச்சினையை சமாளிக்கக்கூடியதாக இருக்கிறது. இவை எத்தனை நாட்களுக்கு போதுமானதாக இருக்கும் என்பதே கேள்வி.

இப்படி அவர் கூறினார்.

(இ 3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!



பி. ஐ. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்பாக)
யாழ்ப்பாணம்.

உதயன்

15 - 7 - 1990 ஞாயிற்றுக்கிழமை

பல் கட்டுபவரும்
கண்ணாடி தருபவரும்,



கிளை: பி. ஐ. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.

# கொழும்பிலிருந்து உணவுப் பொருளை நேரடியாக கொண்டுவர முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 15

மதவாச்சியில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசிய மருந்து வகைகளைக்கொண்டு வரும் நடைமுறையை நிறுத்தி நேரடியாக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அவற்றைக் கொண்டு வருவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

இங்கிருந்து கடந்த புதன் கிழமை சென்ற லொறிகள் எல்லாம் 10 தொன் பொருள்கள் கொள்ளக்கூடிய லொறிகள்.

ஆனால் கொழும்பில் இருந்து மதவாச்சிக்கு பொருள்களை ஏற்றி வந்தவற்றில் 'எல்வ்' டிரக்குகளும், சிறிய லொறிகளும் அடங்கி இருந்தன.

இதனால் இங்கிருந்து சென்ற லொறிகள் பல அரைவாசி நிரம்பிய நிலையிலேயே வரவேண்டியேற்பட்டது.

இதனால் கொழும்புக்கு நேரடியாக லொறிகள் செல்வதன் மூலம் கூடுதலான பொருள்களைக் கொண்டு வரலாம் என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (இ-3)

## ஆயிரம் அப்பாவித் தமிழர் கிழக்கில் உயிரிழப்பு

### பிரேமச்சந்திரன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 15

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் இடங்களில் இலங்கை இராணுவம் நடத்திய தாக்குதலில் கடந்த ஒரு மாதத்தில் சுமார் ஆயிரம் அப்பாவித் தமிழர் கொல்லப்பட்டனர்.

-இப்படி ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகமும், எம்.பியுமான திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

சண்டையை நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி பிரேமதாஸாவைத்தான் கேட்டுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## பலாலி ஷெல் குண்டுகள் யாழ். நகரில் வெடித்தன!

யாழ்ப்பாணம், ஜூலை 15

பலாலியில் இருந்து நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் 11 மணிவரை ஏவப்பட்ட பத்துக்கும் அதிகமான ஷெல் குண்டுகள் யாழ் நகரப் பகுதியில் பரவலாக பல இடங்களிலும் விழுந்து வெடித்திருக்கின்றன.

மக்கள் வாழும் பகுதிகளுக்கு மேலாக பெரும் இரைச்சலுடன் சீறிக் கொண்டுவந்த இந்த ஷெல்கள் பலத்த சத்தத்துடன் விழுந்து வெடித்தன.

இதனால் நேற்று முன்தினம் இரவு நகர மக்கள் கலங்கினர்.

வெலிங்டன் சந்திக்கு அருகில் சடை ஒன்றுக்கு முன்பாகவும், சிறாம்பியடி ஒழுங்கையிலும், ஆஸ்பத்திரி வீதி-மாட்டின் வீதிச் சந்தி ஆகிய இடங்கள் உட்பட பல இடங்களிலும் ஷெல்கள் விழுந்து வெடித்துள்ளன. [உ-10]

### இன்று நல்லூரில் முதலுதவி வகுப்பு

வடமாகாண சென்.ஜோன் அம்புலன்ஸ் படைப் பிரிவு ஏற்பாட்டில் முதலுதவி வகுப்பு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். நல்லூர் சந்தைக்குச் சமீபமாகவுள்ள வன்னியசிங்கம் படிப்பக மண்டபத்தில் நடைபெறும்.

இந்தப் பயிற்சியில் சகலரையும் கலந்து கொள்ளுமாறு நல்லூர் படை அத்தியட்சகர் கேட்டுள்ளார். (ஒ)

## இடம் பெயர்ந்த ஆசிரியர் கூட்டம் நாளை நல்லூரில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். மாவட்டத்திற்கும், மாவட்டத்திற்குள்ளும், இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் கூட்டம் ஒன்று, நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அருகிலுள்ள நல்லூர் ஸ்தான சி.சி. தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறும்.

இதற்கான ஒழுங்குகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

இக்கூட்டத்தில் இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கான ஜூன் மாத வேதனம், விசேட லீவு, போன்ற இடம் பெயர்ந்த ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

இந்தக்கூட்டத்தில், யாழ். மாவட்டத்திலுள்ள சகல தாய்ச் சங்க, மாவட்ட சங்க நிர்வாகிகளையும், யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிளைகளின் தலைவர் செயலாளர்களையும், இடம் பெயர்ந்த வெளிமாவட்ட நிர்வாகிகளையும் கலந்து கொள்ளுமாறும் பொதுச் செயலாளர் கோரியுள்ளார். (இ)

## ஈழ விவகாரத்தில் இந்தியா உடன் தலையிட வேண்டும்

### பாரதீய ஜனதா கட்சி கோருகிறது

சென்னை, ஜூலை 15

இலங்கையில் தமிழர் கொலை செய்யப்படுவதை நிறுத்துவதற்கு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு, நடவடிக்கை எடுக்கும்படி பாரதீய ஜனதாக் கட்சி இந்திய மத்திய அரசைக் கோரியுள்ளது.

கட்சிப் பொதுச் செயலாளர் கிஷான்லால் சர்மா சென்னையில் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு கோரியுள்ளார். (இ-எ)

## உள்ளூர் தபால் சேவைகள் நாளை முதல் ஆரம்பமாகும்

நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் உள்ளூர்த் தபால்சேவைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வடபிரதேச தபால் திணைக்கள அத்தியட்சகர் திரு. எஸ்.எம். சேதுகாவலர் செய்து வருகிறார்.

இதுசம்பந்தமான கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மத்தியதபால் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சேவை ஆரம்பிக்கப் படுவதை முன்னிட்டு தபால் திணைக்கள ஊழியர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமைககமைக்குச் சமுகம் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## சிங்கின் ராஜினாமாவை ஒப்புக் கொள்ள முடியாது

### ஜனதா தள் தலைவர் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 15

பிரதமர் வி.பி. சிங்கின் இராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஜனதாதள் தலைவர் எஸ்.ஆர். பொம்மை நேற்று மாலை அறிவித்தார்.

செய்தியாளர் மாநாடு ஒன்றில் இத்தகவலை வெளியிட்ட திரு. பொம்மை, தற்போதைய அரசியல் நெருக்கடி சுமுகமாகத்தீர்க்கப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இதனிடையில் பிரதமர் சிங் இராஜினாமாச் செய்ய முன்வந்திருப்பதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து இந்திய மத்திய அமைச்சரவை உறுப்பினர்கள், ஜனதாதள் தலைவர்கள், அரசியல் விவகாரக் குழு உறுப்பினர்கள் நேற்று இரவு கூடி ஆராயவிருந்தனர். [உ-எ]

## குஜ்ரால் இடைநடுவில் புதுடில்லி திரும்புகிறார்

கென்யா சென்றுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் தனது பயணத்தை இடையில் ரத்துச் செய்து கொண்டு புதுடில்லி திரும்புகிறார்.

புதுடில்லியில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியே பயணம் ரத்தானதுக்கு காரணம்என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## ராஜினாமாவை வாபஸ்பெற கோருகிறார் தேவிலால்

பிரதமர் பதவியில் இருந்து திரு. வி. பி. சிங் விலகவேண்டிய தேவையில்லை.

-- இப்படி துணைப்பிரதமர் தேவிலால் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதற்குமுன்னர் திரு. தேவிலால் தொலைபேசி மூலம் திரு. வி. பி. சிங்குடன் தொடர்புகொண்டு ராஜினாமாவை வாபஸ்பெறும்படி கேட்டுக்கொண்டார்.

'எனது மகன் ஓம்பிரகாஷ் சௌதாலா ஜனநாயக முறைப்படி ஹரியானா சட்டமன்ற ஜனதாதள் எம்.எல்.ஏக்களால் முதலமைச்சராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். ஆகவே சௌதாலா பதவிவிலக வேண்டியதில்லை' -- என்றும் திரு. தேவிலால் சொன்னார்

★ சூரியா பார்மஸி ★

எமது ஸ்தாபனமாகிய

'சூரியா பார்மஸி'யின் ஒரு சிறு கிளை

புத்தூரில் உபதபால் கந்தோருக்கு முன்பாக திறக்கப்பட்டுள்ளது

என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்.

மு.கு:- அச்சுவேலியில் உள்ள ஸ்தாபனம் காலை 7 மணி தொடக்கம் இரவு 7 மணிவரையும் புத்தூரிலுள்ள ஸ்தாபனம் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் இயங்கும் என்பதை அறியத் தருகிறோம்.

உங்கள் ஆதரவிற்கு நன்றி.

சூரியா பார்மஸி,
பஸ் நிலையம்,
அச்சுவேலி.

சூரியா பார்மஸி,
உபதபால் கந்தோருக்கு முன்பாக
புத்தூர்.

[13741]

## மரண அறிவித்தல்கள்

### நாகநாதர் செல்லத்துரை

புங்குடுதீவை பிறப்பிடமாகவும், கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் செல்லத்துரை 14-7-90 அகால மாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற நாகநாதர், சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற இளையதம்பி வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், தனலெட்சுமியின் அன்புக் கணவரும், கற்பகம், நாகேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும். தங்கரெத்தினம், தருமபாலன், தேவராஜா, கலாநிதி தனபாலன் [இத்தாலி] கமலாம்பிகை, காலஞ் சென்ற விக்கினேஸ்வரன் ஆகியோரின் தகப்பனாரும், கந்தையா, காலஞ் சென்ற பொன்னுத்துரை, பாலசிங்கம், நல்லையா, இராஜதுரை, சதாசிவம், பார்வதி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ் சென்ற கணேசானந்தம், மனோன்மணி, கமலாதேவி ஆகியோரின் மாமனும் துரைநாதன், தேவஞானி, பாஸ்கரன், கிஷா, சசிரேகா, கல்பனா, மது, பிரபு ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-07-90 காலை 10 மணிக்கு புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தில் மூத்த மகனின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(13747)

### திருமதி சின்னத்தம்பி நல்லம்மா

புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த தரணியகலை பிரபல வர்த்தகர் காலஞ்சென்ற இராமநாதர் சின்னத்தம்பியின் அன்பு மனைவி திருமதி நல்லம்மா 14-07-90 அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சடாச்சரசண்முகதாஸ் (உள்துறை அமைச்சு சிரேஷ்ட உதவிச் செயலாளர்/உள்ளூராட்சி ஆணையாளர் வ. கி. மா. தி., கோணமலை), குமாரதாஸ் [பிரான்ஸ்], பங்கயற்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயராணி, பத்மலோசனி [பிரான்ஸ்], கண்ணையா [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற நாகரத்தினம், கனகம்மா, நல்லதம்பி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 15-07-90 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணிக்கு நடைபெற்று மணற்காடு மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இத் தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
சி. சடாச்சரசண்முகதாஸ்

புங்குடுதீவு - 3

(13662)

## அடுத்த வாகனத் தொடர் புதனன்று மதவாச்சி செல்லும்

யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டுவருவதற்கானஇரண்டாவது வாகனஅணி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மதவாச்சி நோக்கிச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி பலன் அளித்துள்ளதை அடுத்தே இரண்டாவது அணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தமுறை 20 லொறிகளை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. (இ-3)

## மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க வலிகாமப் பகுதி உறுப்பினர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்குப் புலிகளின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

சகல உறுப்பினர்களையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. [ஒ]

## ஜே. ஆரின் தாராளம்

கொழும்பு, ஜூலை 15

தேசியப் பாதுகாப்புநிதிக்கு முன்னாள்ஜனாதிபதிஜே.ஆர் ஜெயவர்த்தனா ஐம்பதினாயிரம்ரூபாவைவழங்கினார். [இ-எ]

## ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சை

## மாணவர் கலந்துரையாடல் இன்றும் நாளையும் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஜீ.சி.ஈ (உயர்தரப்) பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். நகரப் பாடசாலைகளில் நடைபெறவிருப்பதால் மாணவர்கள் தத்தமது பாடசாலைகளுக்கு இன்று சமுகம் தரும்படி உயர்தர மாணவர் அமைப்பு கோரியிருக்கிறது.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்தியகல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவ, மாணவிகள் யாழ். மங்கையற்கரசி வித்தியாசாலைக்கு சமுகம் தரும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நாளை காலை நடைபெறவிருக்கிறது.

இதேவேளை சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பளைமகா வித்தியாலயம், ஹாட்லிக்கல்லூரி, நெல்லியடி வத்திய மகாவித்தியாலயம், விக்னேஸ்வராக்கல்லூரி, விக்டோரியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி' யாழ்ரன் கல்லூரி, வேலணை [illegible] வித்தியாலயம், [illegible] இந்துக்கல்லூரி, [illegible] கல்லூரி, சோமஸ்கந்தா கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, ஆகிய பாடசாலைகள் அமைந்துள்ள பகுதிகளைச் சேர்ந்த ஜீ.சி.ஈ உயர்தர மாணவர்களும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் குறிப்பிட்ட பாடசாலைகளில் ஒன்றிற்கு நாளை திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரப் பாடசாலைகளில் நேற்றும் இது சம்பந்தமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. மாணவர்களின் கருத்துக்களை மாணவர் அமைப்புப் பிரதிநிதிகள் கேட்டறிந்து கொண்டனர். [அ-உ]

## இரு இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திக்குள் அத்துமீறி வந்த போது இந்தியக் கடற்படைக் கரையோரக் காவல் படையினரால் வளைத்துப் பிடிக்கப்பட்டன.

அவற்றில் இருந்த பதினொரு பேருடன் அப்படகுகள் தூத்துக்குடிக்குக் கொண்[illegible] குறித்து விசாரணைகள் நடத்[illegible]

## நவாலியில் அஞ்சலிக்கு வைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 15

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மாவிட்டபுரம்-கீரிமலை வீதியில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் கப்டன் சாளி (சாள்ஸ் ஜெகோ நேசன்- நவாலி) மரணமானார்.

அவரது பூதவுடல் இன்று (ஞாயிறு) காலை 9 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நவாலி சென் மேரிஸ் சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். அதன் பின்னர் நவாலி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். [அ]

## செஞ்சிலுவை வைத்தியர் குழு முல்லைத்தீவுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள திருகோணமலை அகதிகளுக்கு வேண்டிய சுகாதார, நிவாரண உதவிகளை வழங்க யாழ்- செஞ்சிலுவைச் சங்க வைத்தியக் குழு ஒன்று இன்று அங்கு செல்கிறது. (இ-3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இரத்தினம் ஜெயரூபன்

தாயின் மடியில்:
13-08-1969

அரக்கரின் பிடியில்:
26-06-1989

கண்களில் இருந்து மறையாத ஜெயரூபனே!
கதிரவன் போன்ற தங்கமகனே!
பன்னிரு மாதங்கள் சென்றதையா
இனிய மகனே நீ எங்கு சென்றாய்?
ஆண்டு பலவானாலும் நெஞ்சம் ஓயாது!
அன்னையுள்ளம் தவிக்குதையா!
ஆறுதல் கூற நீ இல்லாமல் தந்தை நெஞ்சம்
வெடிக்குதையா!

உன்முகம் காணாமல் தவிக்கும்
அன்புஅப்பா, அம்மா,
அன்புத்தம்பி.

பொற்பதிவீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(13735)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org